| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மணிகண்டன் | தகப்பனார் பெயர் | சதாசிவம் |
| நாள் | 02.12.2020 | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி என்னுடைய உடன்பிறந்த சகோதரி என்றால் ஆமாம். அவரை ராசிபுரத்திற்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். 24 வருடங்களாக ராசிபுரத்தில் உள்ளார். அங்கு ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் ஆமாம். அந்த சொத்தில் வாதி சுவாதீனத்தில்இல்லை எனவும், நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன் என்றால் ஆமாம். வீட்டில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்து மனை இடம் 962 சதுரடி. அதில் 432 சதுரடிக்கு வீடு கட்டியுள்ளேன். அந்த வீட்டை அனுபவித்துக்கொள்ள ஆவணம் ஏதும் எழுதிகொடுத்துள்ளாரா என்றால் வீட்டை பார்த்துக் கொள்ளக் கூறியதன் அடிப்படையில் வீட்டில் குடியிருந்துவருகிறேன். வீடு இருக்கும் இடம் ஜலகண்டாபுரம் டவுன்பஞ்சாயத்திற்குட்பட்டது என்றால் ஆமாம். டவுன்பஞ்சாயத்தில் வீடு கட்ட அனுமதி பெறவேண்டும் என்றால் ஆமாம். வீடு கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் அனுமதி பெற்றுள்ளேன். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். எவ்வளவு சதுரடிக்கு வீடு கட்டியுள்ளேன் எனக்கூறுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 2005 லிருந்து 2006 க்குள் அந்த வீட்டை கட்டியுள்ளேன். புகைப்படத்தில் என்னிடம் காட்டப்படும் வீடு அது என்றால் ஆமாம். அதில் பச்சைக்கலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அந்த புகைப்படம் மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.1.) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் பச்சை வர்ணத்தில் குறிப்பிடப்பட்டது நான் குடியிருக்கும் வீடு. அதனருகே உள்ள ஓட்டு வீடு 1ம் பிரதிவாதியின் சகோதரி நிர்மலா உடையது என்றால் ஆமாம். (அந்த புகைப்படம் மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.2). பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் கண்டுள்ள என்னுடைய வீட்டிற்கு வடபுறம் உள்ளது 1ம் பிரதிவாதியின் வீடு என்றால் ஆமாம். சத்தியபிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் 24 அடிநீளத்திலும், தென்வடல் 6 அடி அகலத்திலும் அந்த சந்தை முந்தைய உரிமையாளர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்த சொத்து என்றால் பொது சந்து எனகூறுவது

எங்களுக்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ.2 ல் அவரவர்கள் நிலத்தில் இடம் விடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சின்னம்மாள் சந்தையும் உள்ளடக்கி கிரையம் பெற்றதாக நான் கூறுவது பொய் எனவும், ஏற்கனவே முன் உரிமையாளர்களுக்கு உள்ள சொத்தை தான் கிரையம் வாங்கியுள்ளார் எனவும், சந்தே இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த தேதியில் யாரிடம் கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் வாங்கினார்கள் என்பதும் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் பார்த்ததில்லை. தாக்கல் செய்யவும் இல்லை. 1ம் பிரதிவாதி அவருடைய அக்காவிடமிருந்து கிரையம் வாங்கியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. கணபதி வகையறா நிலத்திற்கு தெற்கு என வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எங்களுடைய நிலத்திற்கு வடக்கே கணபதியின் நிலம் உள்ளது என்றால் ஆமாம். கணபதி வகையறா கண்ணையனுக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்துள்ளனர் என்றால் ஆமாம். அந்த கண்ணையனிடமிருந்து தான் 1ம் பிரதிவாதியும், நிர்மலாவும் ஒட்டுவீடுகளாக கிரையம் பெற்றனர் என்றால் ஆமாம். நான் குடியிருக்கும் என்னுடைய அக்கா வீடு தான் முதன்முதலில் கட்டப்பட்டது என்றால் ஆமாம். புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள காம்பவுண்டு மற்றும் படிக்கட்டு ஆகியவை அப்போது தான் கட்டப்பட்டது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் 2017 ல் தான் வீடு கட்டியுள்ளனர் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.2 ல் வீடு கட்டப்படாமல் உள்ளது என்றால் ஆமாம். அதன்பின்னிட்டுதான் வீடு கட்டியுள்ளனர் என்றால் ஆமாம். அந்த 2 வீட்டிற்குமிடையே சந்து உள்ளது என்றால் இல்லை. சாட்சி தற்போது சந்து உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். மீண்டும் முன்பகுதியில் சந்து இல்லை என சாட்சியம் அளிக்கிறார். முன்பகுதியில் நாங்கள் வீடு கட்டும்போது படிக்கட்டும், காம்பவுண்டு சுவரும் சேர்த்து கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் உள்ள வெள்ளையடிக்கப்பட்ட சுவர் புதிதாக கட்டப்பட்டது என்றால் இல்லை. சுண்ணாம்பு தான் புதிதாக அடிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை நிரூபிக்க கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையர் மூலம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அளக்க ஒத்துழைக்கவில்லை. எல்லைகள் நிர்ணயம் செய்ய 1ம் பிரதிவாதியை கேட்டதாகவும், அதற்கு அவர் மறுத்துவிட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து நீதிமன்ற ஆணையாளரை

நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கு உட்பட்டது பி அட்டவணை சொத்து என்பதும், அதனை பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளனர் என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் தான் முதன்முதலில் வீடு கட்டி அகலப்படுத்தி காம்பவுண்டுசுவர் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் இடத்தில் என்னுடைய நிலம் உள்ளது என்பதற்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் பொய் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.